## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.
## அசல் வழக்கு எண்.122/2018

2023 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 11–ம் நாள் வெள்ளிக்கிழமை என்பவரது சாட்சியின் வாக்குமூலம், 1873 ஆம் ஆண்டு இந்திய சாட்சியசட்டப் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு T. சோழவேந்தன் B.A.,B.L., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 11.08.2023 | தந்தை பெயர்: | வரதன் |
| பெயர்: | கிருஷ்ணன் (PW-1 Chief ) | தாலுக்கா: | சீர்காழி |
| கிராமம்: | சீர்காழி | சமயம்: | |
| சாதி: | | வயது : | 71/2023 |
| தொழில்: | | | |

<u>முதல் விசாரணை : 11.08.2023.</u>

நான் இவ்வழக்கின் 2–ம் வாதியாவேன். எனக்கு வழக்கு விபரம் தெரியும். முதன்மை சாட்சியத்தை சத்தியபிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். சத்திய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். சத்தியபிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். வழக்கிற்கு ஆதரவாக கீழ்காணும் ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

1-ம் வாதி எனது மனைவி. தாவா A ஷெடியூல் சொத்திற்கு எனது மனைவி பெயரில் கோவிலாருக்கு செலுத்திய குத்தகை ரசீது தாக்கல் செய்கிறேன்(2 எண்ணிக்கை) அது **வா.சா.ஆ.1 ஆ குறியீடு செய்யப்படுகிறது.** தாவாசொத்தில் உள்ள மின் இணைப்பிற்கு1-ம் வாதி பெயரில் செலுத்திய மின் கட்டணம் ரசீதின் அசலை தாக்கல் செய்கிறேன்அது **வா.சா.ஆ.2 ஆ குறியீடு செய்யப்படுகிறது**. அசல் வழக்கு எண்.32/2011-ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புரையின் சான்றிட்ட நகலை தாக்கல் செய்கிறேன்அது **வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அசல்

வழக்கு எண்.32/2011-ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணையின் சான்றிட்ட நகலை தாக்கல் செய்கிறேன் அது **வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. அசல் வழக்கு எண்.35/2011-ன் சார்வு செய்யப்பட்ட பிராது நகலை தாக்கல் செய்கிறேன் அது **வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அசல் வழக்கு எண்.35/2011-ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புரையின் சான்றிட்ட நகலை தாக்கல் செய்கிறேன் அது **வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** தாவா சொத்திற்கான 01.01.1991 முதல் 05.04.2018-ம் தேதி வரையிலான கணினி வழி வில்லங்க சான்றை தாக்கல் செய்கிறேன் அது **வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** தாவா சொத்திற்கான கணனி வழி பட்டாவை தாக்கல் செய்கிறேன் அது **வா.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கு இணங்க முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.